මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: BD/CBP/1/3 /0-2019- i
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2019.06.17

**வரவு செலவுத்திட்ட சுற்றுநிருப இல. 04/2019**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**அரசாங்க செலவினத்தினை மேற்கொள்வதில் சிக்கனத்தைக் கடைப்பிடித்தல் - 2019**

2019 வரவு செலவுத்திட்ட உரையில் குறிப்பிடப்பட்டவாறு 2019 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதன செலவினங்களில் 15 சதவீதத்தினை சேமிப்பாக இனங்கண்டு செயற்படுவதற்கு தற்பொழுது அமைச்சுக்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

02. இதற்கு மேலதிகமாக, 2019 ஏப்ரல் மாதம் நாட்டில் ஏற்பட்ட எதிர்பாராத நிகழ்வின் காரணமாக பொருளாதார நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதனால் அரச வருமானத்திற்கு ஏற்பட்டுள்ள பாதகமான தாக்கங்கள் தொடர்பாகவும் கவனத்திற் கொண்டு மேற்குறித்த நிறுவனங்களின் செலவினத்தினை மேற்கொள்ளும் போது மிகவும் சிக்கனமாகவும் வீண் விரயங்களை தவிர்க்கும் வகையிலும் அனைத்து நிறுவன தலைவர்களும் தமது தனிப்பட்ட கவனத்தினை செலுத்துவது அவசியமாகும். விசேடமாக மின்சார வசதி, நீர் வழங்கல், தொலைபேசி சேவைகள், எரிபொருள், பொருட் கொள்வனவு மற்றும் ஏனைய ஒப்பந்த சேவைகள் தொடர்பான முறையான செலவின முகாமைத்துவ முறைமையினை பின்பற்றுவதன் மூலம் அச்சேவைகளைப் பயன்படுத்துவது தொடர்பாக பின்னூட்டல்களை மேற்கொள்ளுவதன் மூலம், அலுவலகப் பொருட்களை கொள்வனவு செய்தல் போன்றவற்றில் செலவின முகாமைத்துவம் அவசியமாகும். மேலதிக செலவினத்தினை மேற்கொள்ளாமை மற்றும் பிற்போட முடியுமான செலவினங்களை பிற்போடுவதற்கும் மேலதிக செலவினங்களைக் குறைத்துக் கொள்வதன் மூலம் மீண்டெழும் செலவினங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதன்படி பின்வரும் விடயங்களின்பால் உங்களது கவனத்தினை செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(i) எரிபொருள், தொலைபேசி, பிரயாணச் செலவினம் தொடர்பாக கொடுப்பனவுகளை மேற்கொள்ளுகின்ற போது குறித்த செலவினங்களுடன் தொடர்பான பொது நிர்வாக மற்றும் ஏனைய சுற்று நிருபங்களின் வழிகாட்டல்களினை உரிய முறையில் பின்பற்றுதல் வேண்டும் என்பதுடன், சுற்றறிக்கைகளில் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்குப் புறம்பாக எவ்வித கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளாதிருத்தல் வேண்டும்.

(ii) மின்சார செலவினங்களைக் குறைப்பதற்காக பொருத்தமான முகாமைத்துவ முறைகளை செயற்படுத்தல் வேண்டும் என்பதுடன் அவசியமற்ற மின் விளக்குகள், மின் விசிறிகளை எப்பொழுதும் அணைத்து வைக்க வேண்டிய செயன்முறை ஒன்றினை நிறுவனத்திற்குள் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மின்சாரப் பட்டியலில் 5 சதவீதத்தினை சேமிக்கும் நோக்கத்துடன் அது தொடர்பான செயற்றிட்டம் ஒன்றினை அமுல்படுத்துவதற்கு அலுவலர் ஒருவரிடம் பொறுப்பினை ஒப்படைத்து அது தொடர்பாக மாதாந்த முன்னேற்றத்தினை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(iii) அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட அரச நிறுவனங்களில் மேலதிக நேர கொடுப்பனவுகளை வழங்குகின்ற போது குறிப்பாக மணித்தியாலங்களை கணக்கிடும் பொழுதும் கொடுப்பனவு வீதங்களை ஏற்பாடு செய்யும் போதும் மேலதிக நேர கொடுப்பனவு விடயம் தொடர்பாக தாபன விதிக்கோவை மற்றும் அவ்வப்போது வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்களில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை கடுமையாகப் பின்பற்றுதல் வேண்டும். உங்களது கண்காணிப்பின் கீழுள்ள கிளைகள்/ அலகுகள் /நிறுவனங்கள் அனைத்திற்கும் மேற்குறித்தவாறு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்குதல் வேண்டும்.

(iv) காகிதாதிகள் மற்றும் அலுவலக பொருட்கள் செலவினத் தலைப்பின் கீழ் பொருட்களைக் கொள்வனவு செய்யும் பொழுது தேவைக்கு அதிகமான அளவு இருப்புக்களை வைத்திருப்பதனைக் குறைத்து முடியுமான அளவு கையிருப்பிலுள்ள காகிதாதிகளின் மூலம் தேவையினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அடுத்த வருடத்திற்கான தினப்பதிவேட்டினை அச்சிடுதல், பஞ்சாங்கம் / திகதி அட்டவணை போன்றவற்றினை அச்சிடுவதற்கு அரசாங்க நிதியினை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும்.

(iv) தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றுநிருப இல: 3/2019 இன் 6 ஆம் பந்தியின் மூலம் வெளிநாட்டுப் பிரயாணம் / கல்விச் சுற்றுலா தொடர்பான செலவினங்களை முடியுமான அளவு குறைப்பதற்கு தற்பொழுது அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது விசேடமாக உள்நாட்டு நிதியினைப் பயன்படுத்தி ஏற்பாடு செய்யப்படும் வெளிநாட்டுக் கல்விச் சுற்றுலாக்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கும் அதேவேளை, இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்தி உத்தியோக பூர்வமாக / அலுவலகக் கடமைகளுக்கான பங்குபற்றுகை அவசியமற்றதாயின் உள்நாட்டு நிதியினைப் பயன்படுத்தி செலவினத்தினை மேற்கொண்டு மாநாடுகள் / செயலமர்வுகளில் அலுவலர்கள் பங்குபற்றாதிருத்தல் வேண்டும்.

03. நாட்டின் அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக நிதி ஒழுங்குமுறை ஒன்றினை ஏற்படுத்திக் கொள்வது அத்தியவசியமானது என்ற வகையில் மேற்குறித்த விடயங்கள் தொடர்பாக உங்களது தனிப்பட்ட கவனத்தினைச் செலுத்தி செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

04. இவ்விடயத்தினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு உங்களது ஒத்துழைப்பினைப் பெரிதும் எதிர்பார்க்கின்றேன்.

**ஒப்பம் /ஆர்.எச்.எஸ் சமரதுங்க**
**திறைசேரியின் செயலாளார்**

பிரதி: கணக்காய்வாளர் நாயகம்